# யுத்தத்தின் பின்னரான இலங்கையில் ஜனநாயகமயப்படுத்தல், அபிவிருத்தியில் சிவில் சமூக அமைப்புக்களின் வகிபாகம்: விசேட ஆய்வு சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவு

**Supervisor**
*Mr. MAM. Fowsar,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. AK. Printhan,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

சிவில் சமூகம் பற்றிய கருத்தாடல் அண்மைக்காலமாக மிகுந்த பிரபல்யம் பெற்றுவருகின்றது. அதிலும் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளின் சிவில் சமூகச் செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. ஏனெனில் இந்நாடுகளில் ஜனநாயகத்தினையும் அபிவிருத்தியினையும் ஏற்படுத்துவதில் பின்தங்கிய நிலை காணப்படுவதனால் சிவில் சமூக நிறுவனங்களின் சிறப்பான செயற்பாடும் பங்களிப்பும் பெருமளவு எதிர்பார்க்கப்படுவதுடன் அவற்றின் முக்கியத்துவமும் உணரப்பட்டுள்ளது. இப்பின்புலத்தில் இலங்கையில் சிவில் சமூக நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவை தேசிய மட்டத்தில் மட்டுமன்றி பிரதேச மட்டத்திலும் தமது பங்களிப்பினை ஆற்றிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் ஜனநாயகமயப்படுத்தல், அபிவிருத்தியில் இச் சிவில் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு என்பது குறிப்பிட்டளவு முன்னேற்றம் காணவேண்டியுள்ளது. அதிலும் குறிப்பாக இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிரதேசமான அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளுக்குள் இயங்கும் சிவில் சமூக நிறுவனங்கள் அப்பிரதேசத்தில் ஜனநாயகத்தினையும் அபிவிருத்தியினையும் கட்டியெழுப்புவதில் அவை வழங்கியுள்ள பங்களிப்பு, அவற்றின் தாக்கமான தன்மை என்பன சர்ச்சைக்குரியவை. இவ்விடயத்தினை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் பிரதான நோக்கம் யுத்தத்திற்குப் பின்னர் ஜனநாயகமயப்படுத்தல், அபிவிருத்தியைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூக நிறுவனங்களின் வகிபங்கினைக் கண்டறிதல் ஆகும். ஆய்வுக்கான விடயப்பரப்பாக சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்புசார் முறைகள் இணைந்த முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக்கான தரவுகள் முதலாம், இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகள் 51 கிராம சேவகர் பிரிவுகளிலும் காணப்படும் மொத்த மக்கள் தொகையில் 100 பேரிடம் விநியோகிக்கப்பட்ட வினாக்கொத்து, பிரதான தகவல் தருனருடன் நேர்காணல், வரையறுக்கப்பட்ட அவதானம் என்பவற்றின் மூலம் முதல் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், கையேடுகள், அறிக்கைகள் போன்ற மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. பகுப்பாய்வின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் யுத்த, யுத்தத்திற்குப் பின்னர் ஜனநாயக மற்றும் அபிவிருத்தியினைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூக நிறுவனங்கள் எந்தளவு தூரம் பங்காற்றியுள்ளன என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** சிவில் சமூகம், ஜனநாயமயப்படுத்தல், அபிவிருத்தி

## "இலங்கையின் இனத்துவ அரசியலில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் சவால்கள்"

**Supervisor**
*Mr. M. Abdul Jabbar,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. SI. Fahmeetha Nahar,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இனத்துவ அரசியல் (Ethnocratic Politics) எனும் தோற்றப்பாடு பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் சமகாலத்தில் அதிகளவில் பேசக்கூடிய ஒரு எண்ணக்கருவாக மாறிக் கொண்டிருக்கிறது எனலாம். இனத்துவ அரசியலில் மதம், இனத்துவம், ஆள்புலம், மொழி மற்றும் கலாசார பண்பாடுகள் என்பன செல்வாக்குடையனவாக காணப்படுகிறன. இந்தவகையில் பல்லின சமூகங்களைக் கொண்ட நாடு என்றவகையில் இலங்கையிலும் இனத்துவ அரசியலின் முன்னெடுப்பு விதிவிலக்கல்ல. இதன் நிமித்தம் இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம் சமூகம் தொழில், கல்வி, பொருளாதார ரீதியான பாரபட்சங்கள், இன, மதம் சார்ந்த நெருக்கடிகள் மற்றும் ஓரங்கட்டல்கள் போன்ற பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது.

இந்தவகையில் இவ்வாய்வானது இலங்கையின் இனத்துவ அரசியலில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல் என்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இலங்கையில் இனத்துவ அரசியலின் முன்னெடுப்பு, இவ் அரசியல் முறைமையில் மதம் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது, மேற்படி சவால்களுக்கான காரணங்களை அறிதல், இச்சவால்களை முடக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிதல் போன்ற உபநோக்கங்களையும் கொண்டுள்ளது.

இவ்வாய்வை மேற்கொள்ளத் தேவையான தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவு மூலங்களாக அவதானம், நேர்காணல், வினாக்கொத்து, மற்றும் இலக்குக் குழு கலந்துரையாடல் என்பன காணப்படுகின்றன. நேர்காணல் 20 எழுமாற்றாகத் தெரியப்பட்ட மாதிரிகளிலிருந்தும், வினாக்கொத்துக்கள் 50 படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம், அறிக்கைகள் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. இத்தரவுகள் பண்பு ரீதியான, அளவு ரீதியான முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் விவரணரீதியாக அட்டவணை, வரைபடங்களைப் பயன்படுத்தி ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மிக நீண்ட காலமாக இலங்கையில் நிலவிவரும் இனத்துவ அரசியலானது சிறுபான்மை முஸ்லிம்களை அடக்கி ஒடுக்குவதாக காணப்படுகிறது. அதாவது இன, மத அடையாளங்கள் மற்றும் அரசியல், பொருளாதாரம், கல்வி வாய்ப்புக்கள், கலாசார பண்பாடுகள் ஆகிய பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பிலும் நெருக்கடிகளை விளைவிக்கின்றது. இலங்கையில் நிகழ்ந்த மூன்று தசாப்த கால இனமுரண்பாடும் இனத்துவ அரசியலின் தாற்பரியத்தை எடுத்துக் காட்டியது. இவ்வாறான நெருக்கடிகளை தீர்க்குமுகமாக அரசு நடவடிக்கைகளை எடுத்தாலும் குறித்த சமூகத்துள் வேரூன்றியுள்ள வேற்றுமைகள் மற்றும் அதிகாரம் செலுத்தும் ஆதிக்கக் குழுக்களின் செயற்பாடுகள் அதாவது பாரபட்சமான அரசியல் சூழ்நிலைகளும், இனத்துவ அழுத்தங்களும் சவால்களை மேலும் தீவிரமாக்குகின்றன.

**பிரதான சொற்கள்:** இனத்துவ அரசியல் (Ethnocatic Politics), இனத்துவம் (Ethnicity), மதம் (Religion)

# சமுர்த்தி திட்ட அமுலாக்கத்தில் வீதிமட்ட பணியகத்தினரின் வகிபங்கு : விஷேட ஆய்வு கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவு

**Supervisor**
*Mr. SM. Aliff,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MM. Meeza Begum,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

ஆரம்ப காலத்திலிருந்து அரசுகள் தமது குடிமக்களுக்குத் தேவையான வாழ்வாதாரத்தை வழங்குவதற்குப் பல முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்துள்ளன. இதற்காக ஒவ்வொரு அரசும் காலத்திற்குக் காலம் பலவிதமான வறுமை ஒழிப்புக் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்தி வருகின்றது. இந்தவகையில் இலங்கை அரசும் 1995 இல் 'சமுர்த்தி' எனும் வறுமை ஒழிப்புக் கொள்கையை உருவாக்கி பணியகவமைப்பு மூலம் இக்கொள்கையை அமுல்படுத்தி வருகின்றது. பணியகவமைப்பின் கீழ் நிலை ஊழியர்களான வீதிமட்ட பணியகவமைப்பினர் (Street Level Bureaucrats) அரசாங்கத்தின் பொதுக் கொள்கையை மக்கள் மயப்படுத்துவதுடன் கொள்ளை இலக்கை அடைவதற்கும் அரசாங்கத்தின் பங்காளியாக உள்ளனர். இவ்வாறே கொள்கை அமுலாக்கத்தில் வீதிமட்ட பணியகவமைப்பினரின் வகிபங்கு மிக முக்கியமானதாகும்.

மேற்படி கொள்கை அமுலாக்கத்தில் வீதிமட்ட பணியகவமைப்பினரின் வகிபங்கு தொடர்பான இவ்வாய்வானது, சமுர்த்தி திட்ட அமுலாக்கத்தில் வீதிமட்ட பணியகவமைப்பினரின் வகிபங்கு தொடர்பாக ஆராய்தல் என்பதனை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் வீதிமட்ட பணியகவமைப்பினர் கொள்கை அமுலாக்கத்தில் எதிர்கொள்ளும் சவால்கள், சவால்களுக்கான காரணங்களை அறிதல், இச்சவால்களை குறைப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிதல் போன்ற உபநோக்கங்களையும் கொண்டுள்ளது.

இவ்வாய்வை மேற்கொள்ளத் தேவையான தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவு மூலங்களாக அவதானம், நேர்காணல், வினாக்கொத்து, மற்றும் இலக்குக் குழுக் கலந்துரையாடல் என்பன காணப்படுகின்றன. நேர்காணல் 15 எழுமாற்றாகத் தெரியப்பட்ட மாதிரிகளிலிருந்தும், வினாக்கொத்துக்கள் 50 படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம், அறிக்கைகள் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. இத்தரவுகள் பண்பு ரீதியான, அளவு ரீதியான முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் விவரணரீதியாக அட்டவணை, வரைபடங்களைப் பயன்படுத்தி ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்** : பணியகவமைப்பு (Bureaucracy) வீதிமட்ட பணியகவமைப்பினர் (Street Level Bureaucrats), கொள்கை அமுலாக்கம் (Policy Implimentation), சமுர்த்தி (Samurdhy).

# ‘இலங்கை சிறுபான்மையோர் அரசியல் பங்குபற்றலில் எதிர்நோக்கும் சவால்கள்: பாலிந்தநுவர பிரதேச சபை பிரிவினை அடிப்படையாகக் கொண்ட விசேட ஆய்வு’


**Supervisor**
*Mr. SM. Aliff,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. R. Kumary,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*



## ஆய்வுச் சுருக்கம்

பொதுவாக ஒரு சமூகத்தில் உள்ள மக்கள் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுக் கொள்கை உருவாக்கத்தில் தன்னிச்சையாக மேற்கொள்ளும் செயற்பாடுகளை அரசியல் பங்குபற்றல் என குறிப்பிடலாம். இன்றைய உலகில் பெரும்பாலான அரசுகள் நவீன ஜனநாயக அரசுகளாகவும் மக்களாட்சியை வலியுறுத்தி நிற்பதனாலும் ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் பங்குபற்றல் எனும் விடயம் முக்கியத்துவமுடையதாக காணப்படுகின்றது. இப் பின்னணியில்தான் இவ்வாய்வானது சிறுபான்மையோர் அரசியல் பங்குபற்றல் (Political Participation of Minorities) எனும் விடயத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எந்தவொரு சமூகமும் சகல துறைகளிலும் முன்னேற வேண்டுமாயின் அங்கு அரசியல் நிலைமைகள் சிறப்பாக காணப்பட வேண்டும். இலங்கையானது ஒரு பல்லின சமூகத்தன்மையை கொண்ட நாடு என்ற வகையில் இங்கு பிரதானமாக தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய இனங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சிறுபான்மையோர் என்ற வகையில் களுத்துறை மாவட்டத்திலுள்ள பாலிந்தநுவர பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட தமிழர் மற்றும் முஸ்லிம்கள் சகல துறைகளிலும் ஏனைய சமூகத்தினரை விட மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதோடு அவர்களின் அரசியல் பங்குபற்றல் வீதமும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். எனவே பாலிந்தநுவர பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் அரசியல் பங்குபற்றல் ஏன் குறைவாக காணப்படுகின்றது? இதனால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை? சவால்கள் யாவை? என்பதை அறிதல் ஆய்வுப் பிரச்சினையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வு, பாலிந்தநுவர பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட சிறுபான்மை மக்களின் அரசியல் பங்குபற்றல் குறைவாக இருப்பதற்கான காரணங்களை கண்டறிந்து அரசியல் பங்குபற்றல் வீதத்தை அதிகரிப்பதற்கான சிபாரிசுகளை முன்வைப்பதனை நோக்கமாகவும் கொண்டுள்ளது. மேலும் இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம், இரண்டாம் நிலை தரவு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), நேர் காணல் (Interview), போன்றவை அடங்குகின்றன. இரண்டாம் நிலைத் தரவில் முக்கியமாக பிரதேச செயலக அறிக்கைகள் அடங்குகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படும் தரவுகளைக் கொண்டு எண்ணளவான முறை (Quantitative method), மற்றும் தர அளவிலான முறை (Qualitative method) என்வற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இறுதியாக, களுத்துறை மாவட்டத்திலுள்ள பாலிந்தநுவர பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட தமிழர் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கான சமூக மற்றும் பொருளாதார வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுவதோடு இம் மக்களின் கல்வியறிவும் மிகக் குறைவாக காணப்படுகின்றமையே இவர்களது அரசியல் பங்குபற்றல் குறைவாக இருப்பதற்கான காரணம் என்பதையும் இவ்வாய்வு கண்டறிகின்றது.



**Key words :** அரசியல் பங்குபற்றல், சிறுபான்மையோர் அரசியல் பங்குபற்றல், ஜனநாயகம், பிரதிநிதித்துவம், வாக்குரிமை

## யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றங்கள்: சீனா, இந்தியாவுடனான இலங்கையின் வெளியுறவு

**Supervisor**
*Mr. MM. Fazil,*
*Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. T .Baby Farmila,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

சர்வதேசப் பரப்பில் எந்தவொரு அரசும் தனித்து இயங்கமுடியாது. அவை அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரம் என பல்வேறு விடயங்களில் பிணைப்பினைக் கொண்டுள்ளன. நவீன சர்வதேச முறைமையில் இப்பிணைப்பின் வழியமைந்த உறவுகளை அரசுகள் திட்டமிடப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் வகுத்து, நடைமுறைப்படுத்தி வருவதனை அவதானிக்கலாம். அக்கொள்கைகளையே நாம் வெளிநாட்டுக் கொள்கை என அழைக்கின்றோம்.இவ்வெளிநாட்டுக் கொள்கையினை நிர்ணயிப்பதில் சனத்தொகை, அமைவிட முக்கியத்துவம், உள்ளக அரசியல் சூழ்நிலை, கலாசாரம், அரசியல் - பொருளாதார - சமூக தொடர்புகள், யுத்தம் போன்ற பல்வேறு காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. அதேவேளை நாடுகள் பின்பற்றுகின்ற வெளிநாட்டுக் கொள்கைகள் அந்தந்த நாடுகளின் தேசிய நலனுடன் தொடர்புபட்ட ஒன்றாகவும் நோக்கப்படுகின்றது. இப்பின்புலத்திலேயே இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை முக்கியத்துவம் பெறுகின்றது. சுதந்திரம் அடைந்ததிலிருந்து இலங்கை அதற்கேயுரித்தான வெளிநாட்டுக் கொள்கையினை நடைமுறைப்படுத்திய அனுபவத்தினைப் பெற்றுள்ளது. எனினும் வெளிநாட்டுக் கொள்கை ஒன்றின் பொதுவான இயல்புகளைப் போன்று இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை கால மாறுதல்களாலும் ஆட்சிபீடம் ஏறும் அரசியல் கட்சிகளின் கொள்கைகளாலும் உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகளாலும் சர்வதேச அரசியல் போக்குகளாலும் தீர்மானிக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதிலும் குறிப்பாக இலங்கையில் சிவில் யுத்தம் முடிவடைந்ததனை அடுத்து அதன் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இம்மாறுதல் போக்கினுள் இந்தியா, சீனா ஆகிய ஆசிய நாடுகளுடனான உறவுகள் குறிப்பிடத்தக்கன. இவ்விரு நாடுகளுடனான இலங்கையின் வெளிநாட்டு உறவினைக் கண்டறிவதே இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது. ஆய்வினை செம்மைப்படுத்துவதற்காக இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய காலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக்கான தரவுகள் முதலாம் (நேர்காணல், வரையறுக்கப்பட்ட அவதானம்), இரண்டாம் (நூல்கள், சஞ்சிகைகள், இணைத்தளம்) நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டவை. இத்தரவுகளைக் கொண்டு யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் அக்கறை கொள்கின்றமைக்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் இலங்கை - சீன உறவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கம், இந்திய - இலங்கை உறவின் மூலம் உருவாகியிருக்கும் புதிய செல்நெறிகள் என்பவற்றிலும் இவ்வாய்வு கவனம் செலுத்துகின்றது. இத்தகைய உறவு நிலைகள் சர்வதேச பரப்பில் இலங்கையின் எதிர்காலத்தினை எவ்வாறு நிர்ணயிக்கப் போகின்றது என்ற விடயத்தினையும் இவ்வாய்வு கருத்திற்கொண்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** யுத்தத்திற்குப் பிந்திய அரசு, தேசிய நலன், வெளிநாட்டுக் கொள்கை

## இலங்கையின் யுத்தத்திற்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் வகிபாகம் : விசேட ஆய்வு நாவிதன்வெளிப் பிரதேசம்


**Supervisor**
*Mr. MM. Fazil,*
*Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. R. Vimalraj,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


நீண்டகால ரீதியான மோதல்களைத் தீர்ப்பதற்கான மாற்றுத் தீர்வு வழிமுறைகளுள் ஒன்று சமாதானத்தினைக் கட்டியெழுப்புதலாகும். அதிலும் குறிப்பாக யுத்தத்திற்குப் பிந்திய சமூகங்களில் நிலைத்து நிற்கத்தக்க அமைதியினை உறுதிசெய்வதற்கு பல்வேறுபட்ட சமாதானக் கட்டுமானச் செயன்முறைகளில் கவனம் செலுத்தப்படுகின்றது. யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவருவது முதல் அடிப்படையான நிறுவனக் கட்டுமானச் செயன்முறை உள்ளடங்கலாக சமூக மீள்நிர்மாணம் வரையிலான சகல அம்சங்களையும் சமதானத்தினைக் கட்டியெழுப்புதல் எனும் எண்ணக்கரு உள்வாங்கியுள்ளது. அடிப்படையில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் என்பது பல்வேறுபட்ட அமைப்புக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு செயன்முறையாகவும் விளங்குகின்றது. வரலாற்றில் யுத்தத்திற்குப் பிந்திய பல்வேறு சமூகங்களில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களே சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறையில் ஈடுபடும் முகவர்களாகச் செயற்பட்டுள்ளன.

இப்பின்புலத்தில் அம்பாரை மாவட்டத்தின் நாவிதன்வெளிப் பிரதேசத்தின் யுத்திற்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல் செயன்முறை குறித்து இவ்வாய்வு பரிசீலிக்கின்றது. அதிலும் குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் குறித்த பிரதேசத்தில் சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எத்தகைய பங்களிப்பினை நல்கியுள்ளன என்ற விடயத்தினை கண்டறிய இவ்வாய்வு முயற்சிக்கின்றது.

இவ்வாய்வு விபரண பகுப்பாய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆய்வுக்கான தரவுகள் முதலாம், இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. முதன்மைத் தரவுகள் மட்டுப்படுத்தப்பட்ட அவதானம், நேர்காணல் என்பவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளதுடன் இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்வாய்வோடு தொடர்புடைய நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தள தரவுகள் என்பவற்றினூடாகப் பெறப்பட்டுள்ளன.

முடிவாகக் கூறுவதாயின் ஆய்வுப் பிரதேச சமூகங்களிடையே காணப்படும் நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்கும் காரணிகளை இனங்கண்டு நிலையான நல்லிணக்கத்தினை எட்டுவதற்கு பரந்தளவான சமாதானக் கட்டுமானச் செயன்முறையுடன் கூடிய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு மிக இன்றியமையாதது எனலாம்.



**பிரதான சொற்கள்:** யுத்தத்திற்குப் பிந்திய சமூகம், சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கம், அரசசார்பு நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள்

## தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைளும் சவால்களும்: பதுளை பிரதேசத்தின் ஹிந்தகல தேயிலைத் தோட்டத்தை மையப்படுத்திய ஆய்வு


**Supervisor**
*Mr. MAM. Fowsar,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. N. Banumathy,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*



### ஆய்வுச் சுருக்கம்

உலகில் நீண்டகாலமாக தொழிலாளர்கள் கடின உழைப்பில் ஈடுபட்டாலும் அவர்களுக்குரிய உரிமைகள், சலுகைகள் என்பன உரிய முறையில் கிடைப்பதில்லை. தொழிலாளர்கள் என்றவகையில் இலங்கையில் மலைவாழ் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரதான வகுப்பினர்களாக உள்ளனர். இலங்கையின் பொருளாதாரத்தில் சுமார் 60%மான வருமானத்தை ஈட்டித்தரும் இவர்களின் நிலையானது ஆரம்பகாலந் தொட்டே பல இன்னல்களுக்குள்ளாகியுள்ளது. அவர்கள் சமூகத்தின் பல தளங்களில் பாரிய பிரச்சினைகளையும் பின்னடைவுகளையும் எதிர்நோக்கிவருகின்றனர். அரசியல், பொருளாதார ரீதியாகவும் கல்வி, கலை, கலாசார, சுகாதார, சமூக ரீதியாகவும் பல உரிமைகளை இழந்து நிற்கின்றனர். அவர்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும் அவை இன்னும் முழுமையான வெற்றியினைப் பெறாத ஒரு நிலையே தொடர்ந்தும் நிலவிவருகின்றது. இப்பிரச்சினையினை கருப்பொருளாகக் கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளையும், அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் இனங்கண்டு அவற்றினைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகளை பரிந்துரைப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்புசார் முறைகள் இணைந்த முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக்கான தரவுகள் முதலாம், இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்து, பிரதான தகவல் தருனருடன் நேர்காணல், வரையறுக்கப்பட்ட அவதானம் என்பவற்றின் மூலம் முதல் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், கையேடுகள், அறிக்கைகள் போன்ற மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு எண்ணளவிலான மற்றும் தரவளவிலான முறைகளில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பலத்த சவால்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன், அரசியல், சமூக, பொருளாதார தேவைகளினையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமாயின் அவர்களுக்கு உரிமைகள் தொடர்பிலான அறிவும், அதை அணுகும் முறைகளைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.



**பிரதான சொற்கள்:** தோட்டத் தொழிலாளர்கள், உரிமைகள், வாழ்வாதாரம்